# வட மாகாண விவசாய திணைக்களம் - நிறுவன ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

வடமாகாண விவசாய திணைக்களம், இலங்கையின் யாழ்மாவட்டத்தில் வடக்கு மாகாணசபையின் ஒரு திணைக்களமாகக் காணப்படுகின்றது. வடக்கு கிழக்கு மாகாண சபையிலுருந்து பிரிந்து 01.01.2007 ஆம் திகதி தொடக்கம் செயற்பட்டு வரும் வட மாகாண சபையின் விவசாய அமைச்சின் கீழ் இது காணப்படுகின்றது. இதன் செயற்பாட்டுப் பரப்பு வட மாகாண எல்லையாகும். இவ் திணைக்களமானது மாவட்ட மட்டத்தில் ஒவ்வொரு உப அலுவலகத்தை கொண்டு காணப்படுகின்றது. இவ் உப அலுவலகங்கள் பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி)அலுவலகம் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றுக்குப் பொறுப்பாக பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் காணப்படுவார்கள். இவர்களினால் மாவட்டத்தின் விரிவாக்கச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். நிர்வாக ரீதியான செயற்பாடுகளை தலைமையலுவலகம் செயற்படுத்துவதுடன் உப அலுவலகங்களின் செயற்பாடுகளை நேரடியாகவும் நெறிப்படுத்துகின்றது. இவ்வாறு விவசாய செயற்பாடுகளை விரிவாக்கம் செய்யும் இத் திணைக்களத்தையும், திணைக்களத்தில் காணப்படும் ஆவணங்களை பாதுகாப்பதும் மிக முக்கியமாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

வடமாகாண விவசாய திணைக்களம், இலங்கையின் யாழ்மாவட்டத்தில் வடக்கு மாகாணசபையின் ஒரு திணைக்களமாகக் காணப்படுகின்றது. இச் செயற்றிட்டத்தின் மூலம் இவ் வடமாகாண விவசாய திணைக்களம் சார்ந்த அனைத்து விடயங்களையும் ஆவணப்படுத்தி, பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு கையளிக்கவும், வடமாகாண விவசாய திணைக்களம் தொடர்பான அனைத்து அம்சங்களையும் இணையத்தளத்தில் திறந்த வெளியில் இலவசமாக அனைவரும் பார்த்து பயனடைந்து கொள்ளச்செய்வதும் இவ் ஆவணப்படுத்தலின் முக்கிய நோக்கமாகும்.

## செயற்றிட்ட அடைவுகள்

வடமாகாண விவசாய திணைக்களம் தொடர்பான அனைத்து விடயங்களையும் கண்டறிந்து ஆவணப்படுத்துவதன் மூலம் வடமாகாண விவசாய திணைக்களத்தின் ஒட்டுமொத்த அம்சங்களும், இவ் திணைக்களத்தோடு தொடர்புடைய ஆளுமைகளை அடையாளம் கண்டு அவர்களின் வாய்வழி வரலாறும் பதிவுசெய்யப்பட்டு ஆவணமாக்கி பாதுகாக்கப்படும். அத்தோடு, நூலக நிறுவனத்தினூடாக வடமாகாண விவசாய திணைக்களம் தொடர்பான பூரணமான விடயத்தை இணையத்தளம் மூலமாக பார்வையிடுவதற்கான அணுகல் வசதி அனைவருக்கும் இலவசமாக ஏற்படுத்திக்கு கொடுக்கப்படுவதோடு, அவை எதிர்கால சந்ததியிடம் பாதுகாப்பாக கொண்டு சேர்க்கப்படும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. குறித்த இச் செயற்றிட்டத்திற்கு தேவையான பணியாளர்கள் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்குரிய மாதாந்த அடைவு மட்டத்தை நிர்ணயித்து குறிப்பிட்ட காலத்திற்குள் வடமாகாண விவசாய திணைக்களம் தொடர்பான அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டம் பூரணப்படுத்தப்படும்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**